DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.206/2025**

Prosecution **PW.1**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.செந்தில்குமார் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | பிச்சை | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.11.2025

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. எதிரிக்காக குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் நெடுஞ்சாலை ரோந்து எண். 4 கரூரில் தலைமைக்காவலாராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.09.2018ம் தேதி லாலாப்பேட்டை காவல் நிலையத்தில் 2ம் நிலைக்காவலராக பணிபுரிந்து வந்த போது இரவு மணல் திருட்டு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் ரகுமான் தலைமை காவலர் ஆறுமுகம் ஆகியோருடன், லாலாப்பேட்டை மேம்பாலம் அருகில் உள்ள காவிரிகரை பகுதி ரோந்து சென்று கொண்டிருந்த போது அதிகாலை 03.30 காவிரி ஆற்றுப்படுகைக்கு பார்த்தபோது TN 40A 9121 என்ற லாரியில் இருந்த ஒரு ஆண் நபர் எங்களை பார்த்தவுடன் இறங்கி ஓடிவிட்டார்.

2. வண்டியில் இருந்த நபர் அவர் பெயர் சிவக்குமார் என்றும் அவர் மேற்படி லாரியின் டிரைவர் என்றும் சொன்னார். மேற்படி வண்டியில் ஆற்றுமணல் ஏற்றப்பட்டிருந்தது. ஓடிய நபர் பிரதீப் என்று சிவக்குமார் சொன்னார். ஓடிய நபரை என்னால் அடையாளம் காட்டமுடியும். ஆஜர் எதிரி சிவக்குமார் தான் மேற்படி வண்டியின் டிரைவராக இருந்தவர் ஆவார். உதவி ஆய்வாளர் ரகுமான் எதிரியை விசாரித்தார். பிறகு மணலையம் லாரியையும் கைப்பற்றுதல் மகசரில் உதவி ஆய்வாளர் ரகுமான் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்.

3. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். முதல் கையொப்பம் தலைமைக்காவலர் ஆறுமுகம் என்பவருடையது ஆகும். (**கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் எதிரிகள் மற்றும் வழக்குச்சொத்துடன் நிலையம் கொண்டு வந்து வழக்குப்பதிவு செய்தார் . என்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. இந்த வழக்கில் தனிநபர் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ரோந்து பணிக்கு சென்ற வாகனத்தை பற்றி உதவி ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ரோந்து பணிக்கு செல்லும் போது கிராம பட்டாவில் கையொப்பம் செய்ய வேண்டும் நாங்கள் கையொப்பம் செய்தோமா என்றால் நாங்கள் மணல் ரோந்துக்கு தான் போனனோம் அதனால் செய்யவில்லை. மணல் ரோந்திற்கு செல்வதற்கு கடவுச்சீட்டு எதாவது கொடுத்தார்களா என்றால் இல்லை.

2. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் தேதியில் ரோந்து சென்ற பணிக்கு சென்ற ஆவணம் உதவி ஆய்வாளரிடம் ஏதாவது கொடுத்தோமா என்றால் இல்லை. இந்த வழக்கில் கனிம வளத்துறையோ, வருவாய் துறையினரோ புகார்கொடுத்தார்களா என்றால் இல்லை. மணல் பிடித்தாக சொல்லப்படும் நேரத்தில் அதன் அளவை எதை வைத்து சொல்கிறேன் என்றால் வண்டியின் பாதி மட்டத்தில் இருந்த மணலை வைத்து சொன்னேன். Weigh Bridge அளந்து சொல்லாமல் அனுமானத்தின் பேரில் மணலை அளவை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3. முதல் விசாரணையில் சொன்ன சங்கதியைத்தான் உதவி ஆய்வளாரிடம் சொன்னேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன மணலின் அளவைத்தான் முதல் விசாரணை அறிக்கையிலும் சொல்லியுள்ளேன். நான் சொல்லும் ஆற்றுப்பகுதி கிராம மக்கள் காலைக்கடன் கழிக்கும் பகுதி என்றால் இல்லை. ஆள்நடமாட்டம் உள்ள பகுதி என்றால் இல்லை. புள்ளிவிவரக்கணக்கிற்காக உதவி ஆய்வாளர் போட்ட பொய் வழக்கில் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.26 15:57:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.